# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| Spl.C.C.No. | 80/2019 | அரசு தரப்பு | அ.சா.44 |
| சாட்சியின் வாக்கு மூலம் | | எதிரி தரப்பு | |
| பெயர் | வேல்பாரி | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 16th day of October 2019.

முதல் விசாரணை

நான் கோயமுத்தூரில் பதிவாளர் (கம்பெனிகள்) அலுவலகத்தில் தொழில்நுட்ப அலுவலராக பணி புரிந்து வந்து 2018 ஆம் வருடம் வயது முதிர்வு பணி ஓய்வு பெற்றுள்ளேன். இவ்வழக்கின் புலன் விசாரணை காலத்தில் நான் கோயமுத்தூர் கம்பெனி சட்டத்தின் கீழ்னான பதிவாளர் அலுவலகத்தில் தொழில்நுட்ப அலுவலராக பணி புரிந்து வந்தேன். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் 5.1.2012 ஆம் தேதியிட்ட கடிதத்தின் மூலம் பொங்கலூர் பழனிசாமி மற்றும் அவரது குடும்பத்தார்கள் கம்பெனிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள பங்கு விவரங்கள் பற்றிய விவரங்களை கம்பெனி பதிவாளரிடம் கேட்டிருந்தார்கள். கம்பெனிகளின் பதிவாளர் என்னிடம் சம்மந்தப்பட்ட ஆவணங்களை கொடுக்கும்படியும், அது குறித்த விவரங்கள் ஏதும் தேவைப்பட்டால் அதைப் பற்றியும் அளிக்குமாறு எனக்கு பணித்திருந்தார். பொங்கலூர் பழனிசாமி மற்றும் அவருடைய குடும்பத்தார் சம்மந்தப்பட்ட ஐந்து கம்பெனிகள் தொடர்பான விவரங்களை நான் வழங்கினேன். அவை வருமாறு 1) மாரீஸ் சிமெண்ட் பிரைவேட் லிமிடெட், 2) நீலகிரீஸ் சிமெண்ட் பிரைவேட் லிமிடெட், 3) மெட்ரான் பார்ம்ஸ் பிரைவேட் லிமிடெட், 4) சௌத் ஈஸ்டன் செக்யூரிட்டீஸ் பிரைவேட் லிமிடெட், 5) ஸ்ரீபழனிவேல் டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் சம்மந்தப்பட்ட ஆண்டு கணக்கு அறிக்கைகள் மற்றும் பங்கு முதலீடு சம்மந்தப்பட்ட

ஆவணங்களை போலீசிடம் நான் வழங்கினேன். மேற்படி ஆவணங்கள் குறித்து என்னிடம் போலீசார் விளக்கங்களைக் கேட்டார்கள். மேற்படி ஆவணங்களைப் பரிசீலித்து பொங்கலூர் பழனிசாமி மற்றும் அவருடைய குடும்பத்தாரும் 2006 ஆம் வருட ஆவணத்தில் கண்ட விவரத்தையும், 2010 வருட ஆவணத்தில் கண்ட விவரத்தையும் விளக்கினேன். மாரீஸ் சிமெண்ட் நிறுவனத்தில் 29.9.2006 தேதியிட்ட கம்பெனி சமர்ப்பித்த அறிக்கையின்படி திரு.பழனிசாமி ரூ.100/- ரூபாய் மதிப்பிலான பங்குகள் 7969 எண்ணிக்கைகளில் ஆன பங்குகளை கொண்டிருந்தார். மேற்படி பங்குகளின் முக மதிப்பு ரூ.7,96,900/- ஆகும். இதுபோக ரூ.10/- முக மதிப்பிலான 26,640 பங்குகளை பொங்கலூர் பழனிசாமி பெயரில் கொண்டிருந்தார். மேற்படி பங்குகளின் முக மதிப்பு ரூ.2,66,640/-  ஆகும். அதே நிறுவனத்தில் பழனிசாமியின் மகன் பைந்தமிழ் என்பவர் ரூ.10/- முக மதிப்பிலான 14,690 பங்குகளை வைத்திருந்தார். அதன் முக மதிப்பு ரூ.1,46,900/- ஆகும். இதுவும் தவிர ரூ.100/- முக மதிப்பிலான 3204 பங்குகளையும் பைந்தமிழ் வைத்திருந்தார். அதன் முக மதிப்பு ரூ.3,20,400/- மதிப்பு ஆகும். என்.பழனிசாமியின் மனைவி விஜயலட்சுமி என்பவர் ரூ.10/- முக மதிப்பிலான 990 பங்குகளை வைத்திருந்தார். அதன் முக மதிப்பு ரூ.9,900/- ஆகும். அவரே திருமதி விஜயலட்சுமி  ரூ.100/- முக மதிப்பிலான 651 பங்குகளை வைத்திருந்தார். அதன் முக மதிப்பு ரூ.65,100/- ஆகும்.  31.3.2007 க்கு முன்பாக மேற்படி கம்பெனியில் அட்வான்ஸ் தொகையாக ரூ.1,20,96,769/- செலுத்தப்பட்டுள்ளது. அதற்கு முந்தைய ஆண்டான 31.3.2006 ல் ரூ.1,16,73,153/- அட்வான்ஸ் தொகை இருந்தது. 2006-2007 நிதியாண்டில் கம்பெனிக்கு கொடுக்கப்பட்ட பங்கு அட்வான்ஸ் தொகை ரூ.6,33,616/- ஆகும். அதாவது 31.3.2006 க்கும், 31.3.2007 க்கும் இடைப்பட்ட வேறுபாட்டுத் தொகை ரூ.6,33,616/- ஆகும். அந்த தொகையே கம்பெனிக்கு கொடுக்கப்பட்ட அட்வான்ஸ் தொகையாகும். 31.3.2008 நிதிநிலை அறிக்கையின்படி பங்கு அட்வான்ஸ் தொகை ரூ,1,34,82,470/- ஆக இருந்தது. 31.3.2007 நிதி ஆண்டிற்கும், 31-03-2008 ஆம் நிதியாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் வாங்கப்பட்ட பங்கு அட்வான்ஸ் தொகை ரூ.13,85,701/- ஆகும். 31.3.2009 ஆம் தேதியில் இந்த கம்பெனியில் பங்கு அட்வான்ஸ் தொகை ரூ.1,44,65,450/- ஆக இருந்தது. இதன்படி முந்தைய ஆண்டிற்கும், 31.3.2009 ஆம் தேதிக்கும் இடையில் வாங்கப்பட்ட பங்கு அட்வான்ஸ் தொகை ரூ.9,82,980/- ஆகும். இந்த மூன்று ஆண்டுகளில் மொத்தமாக ரூ.30,02,297/- பங்கு அட்வான்சாக பெறப்பட்டது.  மேற்படி

பங்கு அட்வான்ஸ் தொகைகள் பழனிசாமியிடமிருந்து பெறப்பட்டதாக ஆவணத்தில் காணப்படுகின்றன.

நீல்கிரீஸ் சிமெண்ட்ஸ் என்ற கம்பெனி 26.9.2006 ஆம் தேதிய விவரங்கள் அடங்கிய ஆவணம் பழனிசாமி அவர்கள் ரூ.100/- முக மதிப்பிலான 10,000 பங்குகளை இந்த நிறுவனத்தில் வைத்திருந்தார். அவற்றின் மொத்த முக மதிப்பு ரூ.10,00,000/- ஆகும். பழனிசாமியின் மனைவி விஜயலட்சுமி என்பவரின் பெயரில் ரூ.100/- முக மதிப்பிலான 2660 பங்குகள் இருந்தன. அவற்றின் மொத்த முக மதிப்பு ரூ.2,66,000/- ஆகும். 29.09.2010 தேதியிட்ட ஆவணத்தில் கண்ட குறிப்பின்படி பழனிசாமி அவர்கள் பெயரில் ரூ.100/- முக மதிப்பிலான 10,887 பங்குகள் இருந்தன. இவற்றின் மொத்த முக மதிப்பு ரூ.10,88,700/- ஆகும். ஆக இடைப்பட்ட காலத்தில் 887 பங்குகள் பழனிசாமி கூடுதலாக வாங்கியுள்ளார். மேற்படி 887 பங்குகள் விஜயலட்சுமியிடமிருந்து பழனிசாமி பெயருக்கு 2010 ஆம் வருடத்தில் மாற்றப்பட்டுள்ளது. விஜயலட்சுமி பெயரிலிருந்து பைந்தமிழ் பெயருக்கு 887 பங்குகள் மாற்றப்பட்டுள்ளது. இந்து முருகேசன் என்பவருக்கும் 887 பங்குகள் விஜயலட்சுமி பெயரிலிருந்து மாற்றப்பட்டுள்ளது.

சௌத் ஈஸ்டன் செக்யூரிட்டீஸ் & சர்வீசஸ் என்ற நிறுவனத்தில் 30.09.2003 ஆம் தேதியிட்ட ஆவணத்தின்படி பழனிசாமியின் பெயரில் ரூ.10/- முக மதிப்பிலான 50 பங்குகள் இருந்தன. அதன் மொத்த முக மதிப்பு ரூ.500/- ஆகும்.

ஸ்ரீபழனிவேல் டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தில் 30.09.2006 ஆம் தேதியிட்ட ஆவணத்தின்படி பழனிசாமி அவர்கள் பெயரில் ரூ.100/- முக மதிப்புள்ள 100 பங்குகள் இருந்தன. இவற்றின் மொத்த முக மதிப்பு ரூ.10,000/- ஆகும். 29.09.2010 ஆம் தேதியிட்ட ஆவணத்தின்படி பழனிசாமி பெயரில் ரூ.100/- முக மதிப்பிலான 400 பங்குகள் மொத்த மதிப்பு ரூ.40,000/- இருந்தது. அவை 24.1.2010 ஆம் தேதியில் வி.எஸ்.பிரகாசம் குமார் என்பவருக்கு மாற்றம் செய்ததாக ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மெட்ரான் பார்ம்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தில் 30.9.2010 ஆம் தேதியிட்ட ஆவணத்தின்படி ரூ.100/- முக மதிப்பிலான 4300 பங்குகள் பழனிசாமி அவர்களின் பெயரில் இருந்தன. இதற்கு முந்தைய 30.6.2006 ஆம் தேதியிட்ட ஆவணத்தின்படி 01-06-2006 தேதியிலேயே 4300 பங்குகள் வாங்கப்பட்டது அதில் நித்தியானந்தம் என்பவரிடமிருந்து 4000 பங்குகளும், கிருஷ்ணமூர்த்தி என்பவரிடமிருந்து 300 பங்குகளும் வாங்கப்பட்டிருந்தன. 31.03.2010 ஆம் தேதி வரையில் மேற்படி கம்பெனிகளில் பழனிசாமியின் பெயரிலும், அவருடைய மனைவி விஜயலட்சுமி மற்றும் அவருடைய குடும்பத்தார்கள் பெயரில் உள்ள ஈவுத்தொகையோ, வருமானமோ ஏதும் வழங்கப்படவில்லை. மேற்படி ஐந்து நிறுவனங்கள் சம்மந்தமான பங்கு பத்திரங்கள், படிவம் 20 B, படிவம் 23AC, உள்ளடக்கிய பதிவாளரின் முகப்பு கடிதத்துடன் அடங்கிய கோப்பு அ.த.சா.ஆ.88 ஆகும். அ.த.சா.ஆ.88 முகப்புக்கடிதத்தில் கையொப்பமிட்டுள்ள அப்போதைய கம்பெனியின் பதிவாளர் திரு.டாக்டர் மனுநீதி சோழன் தற்போது உயிருடன் இல்லை. இது சம்மந்தமாக ஊழல்தடுப்பு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தார்.

<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

**5.1.2012** ஆம் தேதி கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அவர்கள் எழுதியதாகச் சொல்லும் கடிதம் அ.த.சா.ஆ.88 கோப்பில் இல்லை. அது சம்மந்தமான பார்வை குறிப்பு உள்ளதா என்றால் உள்ளது. கடித எண்.ஆர்.சி.252/2011 /PUB/HQ, dated 05-01-2012 என உள்ளது. மேற்படி கடிதத்தைக் காண்பித்து என்னை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரித்தாரா என்றால் கடிதத்தைக் காண்பித்து விசாரிக்கவில்லை. அந்த கடிதத்தில் எந்த, எந்த கம்பெனிகள் பற்றிய விவரங்கள் கோரப்பட்டிருந்தன என்பதற்கான குறிப்பு அ.த.சா.ஆ.88 கோப்பில் இல்லை என்றால் சரிதான். தற்பொழுது நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளைத்தான் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையிலும் நான் சொன்னேன். பைந்தமிழ்பாரி, இந்து முருகேசன் ஆகியோர்கள் கொண்டிருக்கும் பங்குகள் சம்மந்தமாக கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் நான் குறிப்பாகச் சொல்லவில்லை என்றால் சரிதான். பங்கு முன் பண வேறுபாட்டு

தொகை குறித்து முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் விசாரணையில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். **2006** ஆம் வருடத்தில் ஸ்ரீ பழனிவேல் டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிடெட்டில் பழனிச்சாமி பெயரில் எவ்வளவு பங்குகள் இருந்தது என்றால் ரூ.**100** முகமதிப்பிலான **100** பங்குகள் இருந்தன. **2010** ஆம் வருடத்தில் மேற்படி ஸ்ரீ பழனிவேல் டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிடெட்டில் பழனிச்சாமி பெயரில் **400** பங்குகள் இருந்தன. **2010** ஆம் வருடத்தில் ஸ்ரீ பழனிவேல் டெக்ஸ்டைல்ஸில் பழனிவேல் பெயரில் எவ்வாறு **400** பங்குகள் வந்ததற்கான விவரங்கள் கோப்பில் இல்லையென்றால் சரிதான். மேற்படி **100** பங்குகளுடன் கூடுதலாக பங்குகள் வாங்கியுள்ளாரா அல்லது பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறதா என்ற விவரங்கள் கோப்பில் இல்லையென்றால் சரிதான். **05-01-2012** ஆம் தேதியில் ஊழல் தடுப்பு மற்றும் கூடுதல் காவல்கண்காணிப்பாளர் கேட்டுள்ளதன்படி அ.த.சா.ஆ **88** ல் ஆவணங்களை ஒப்படைக்கவில்லையென்றால் அந்த கடிதத்தை பார்க்காமல் மேற்படி வினாவிற்கு என்னால் பதிலளிக்க முடியாது.

<u>மறு விசாரணை</u> இல்லை

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| Spl.C.C.No. | 80/2019 | அரசு தரப்பு | அ.சா.45 |
| சாட்சியின் வாக்கு மூலம் | | எதிரி தரப்பு | |
| பெயர் | முனுசாமி | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 16th day of October 2019.

முதல் விசாரணை

நான் கோவை வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலராக பணிபுரிந்து 2017 ஆம் வருடம் மே மாதம் பணி ஓய்வு பெற்றேன். கடந்த 12-04-2012 அன்று வட்டார போக்குவரத்து அலுவலர், கோவை (தெற்கு) ஆக பணிபுரிந்து வந்தபோது, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல்கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து வேண்டுகோள் கடிதம் வந்தது. அந்த வேண்டுகோள்கடிதத்தில் கோவை தெற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த பதிவு எண். TN 37 U 6162 மற்றும் TN 37 AA 0919 ஆகிய வாகனங்கள் பற்றிய விவரங்களையும், (B பதிவேடு) பதிவு சான்றிதழையும் கேட்டிருந்தார். அதன்படி 12-04-2012 அலுவலக கோப்பு எண்.136587/A2 /2011-ன் படி வழங்கினேன். அவ்வாறு மேற்படி இரு வாகனங்களுக்கான நான் வழங்கிய B பதிவேடு மற்றும் பதிவு சான்றிதழையும் முகப்பு கடிதத்தோடு கூடுதல் காவல்கண்காணிப்பாளிரிடம் ஒப்படைத்தேன். அந்த கோப்பு அ.த.சா.ஆ.89. என்னை 14-04-2012 அன்று கூடுதல்காவல்கண்காணிப்பாளர் விசாரித்தார். கூடுதல் காவல் கண்காணிப்பாளரின் விசாரணையின் போது TN37 U 6162 என்ற Fiat uno Diesel AC LMV கார் 01-03-2000 ஆம் தேதியன்று திருமதி.P.விஜயலட்சுமி க/பெ. R.பழனிச்சாமி 1-A-1 நாராயணா அவென்யூ, சிங்காநல்லூர், கிருஷ்ணா காலனி, கோவை - 5 என்ற முகவரிக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது.

மேற்படி வாகத்திற்கான பதிவு கட்டணமாக ரூ.100/- 01-03-2000 ஆம் தேதியன்றும், சாலை வரியாக ரூ.70/- 01-03-2000 ஆம் தேதியன்றும் செலுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட வாகனத்திற்கு சுந்தரம் ஆட்டோ பைனான்ஸ் லிமிடெட், சென்னை அவர்களிடம் நிதி உதவி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட வாகனத்திற்கு வாங்கப்பட்ட கடன் தொகை 25-10-2005 திருப்பி செலுத்தப்பட்டு கடன் ஒப்பந்தம் முடிக்கப்பட்டுள்ளது. மற்றொரு வாகனமான TN37 AA 0919 என்ற எண்ணுள்ள இலகு ரக மாருதி 800 கார் வாகனம் ஸ்ரீ சாரதாம்பாள் ஆட்டோ, கோயமுத்தூர் என்ற நிறுவனத்திலிருந்து வாங்கப்பட்டு திரு.N. பழனிச்சாமி 1999-A கிருஷ்ணா காலனி, கோவை என்ற முகவரியில் 13-05-2005 அன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்திற்கு சுந்தரம் பைனான்ஸ் சென்னை அவர்கள் நிதி உதவி வழங்கியுள்ளார்கள். மேற்கண்ட வாகனத்திற்கு பெறப்பட்ட கடன்தொகை 23-12-2008 அன்று திருப்பி செலுத்தப்பட்டு கடன் ஒப்பந்தம் முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வாகனம் திரு.N.அர்ஜுனன் த/பெ. நாச்சிமுத்து 1999-A, கிருஷ்ணா காலனி, சிங்காநல்லூர், கோவை என்ற முகவரிக்கு 23-12-2008 அன்று உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட உரிமைமாற்றத்தின் போது வழங்கப்பட்ட படிவம் 60-ல் வாகனத்தின் மதிப்பு ரூ.1,20,000/- என குறிப்பிடப்பட்டுள்ளது. அ.த.சா.ஆ.89 கோப்பில் மேற்படி வாகனம் உரிமை மாற்றம் செய்யப்பட்டதற்கான ஆவணங்களும், படிவங்களும் உள்ளன. இது சம்பந்தமாக கூடுதல்காவல்கண்காணிப்பாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கூடுதல்காவல்கண்காணிப்பாளர் **12-04-2012** ஆம் தேதியில் விவரங்கள் கேட்டு எங்களுக்கு கொடுத்த வேண்டுகோள்கடிதம் அ**.**த**.**சா**.**ஆ**.89-**ல் இணைக்கப்படவில்லையென்றால் சரிதான்**.** அந்த கடிதத்தில் என்னக் கோரப்பட்டிருந்தது என்ற விவரத்தை அந்த கடிதத்தை பார்த்தால் தான் என்னால் சொல்லமுடியும்**.** மேற்படி வாகனங்கள் பதிவு செய்யப்படும் போது அதன் மதிப்பை விண்ணப்பத்தில் குறிப்பிடுவார்களா என்றால் அதற்கான இன்வாய்ஸ் இணைப்பார்கள்**.** அது சம்பந்தமான ஆவணங்கள் அ**.**த**.**சா**.**ஆ**.89-**ல் உள்ளனவா என்றால் பதிவு எண்**. TN37 U 6162** வாகனத்தின் விலைப்பட்டியல் **(Invoice)** அ**.**த**.**சா**.**ஆ**.89** கோப்பில் உள்ளது**.** மேற்படி

வாகனம் **01-03-2000** தேதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது**.** பதிவு தேதியில் அதன் மதிப்பு ரூ**.4,06,179/-** ஆகும்**.** பதிவு எண்**. TN37 AA 0919** என்ற வாகனத்திற்கான **Invoice** அ**.**த**.**சா**.**ஆ**.89** கோப்பில் இணைக்கப்படவில்லையென்றால் சரிதான்**. 13-05-2002** ஆம் தேதியில் மேற்படி வாகனம் பதிவுசெய்யப்பட்டுள்ளது**.** மேற்படி வாகனம் ஸ்ரீ சாரதாம்பாள் ஆட்டோ நிறுவனத்திலிருந்து வாங்கப்பட்ட போது அதன் விலை மதிப்பு என்ன என்பதற்கான ஆவணம் அ**.**த**.**சா**.**ஆ**.89-**ல் இணைக்கப்படவில்லையென்றால் சரிதான்**.**

<u>மறு விசாரணை</u> இல்லை